# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**நிலையறிபரீட்சை – 2021**

## தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் –I,II

| பெயர் ∴ சுட்டெண் :- ………………… | தரம் :- 9 | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

**பகுதி 1**

1. கணினியைப் பயன்படுத்துபவரை எப் பெயர் கொண்டு அழைக்கலாம்?
   1. உதவியாளர் 2. பயனர் 3. இடைமுகம் 4. பணிசெயல்முறைமை

2. மின்னேற்றத்தக்க மின்கலத்திலிருந்து மின்னினைப் பெற்றுப் பயன்படுத்தக்கூடிய கணினி பின்வருவனவற்றுள் எது?
   1. மடிக்கணினி 2. கையேட்டுக்கணினி
   3. சூட்டிகைத் தொலைபேசி 4. மேற்கூறிய யாவும்

3. கணினியில் தரவுகளையும் அறிவுறுத்தல்களையும் நுழைப்பதற்கு பயன்படுத்தப்படும் சாதனங்கள்
   1. உள்ளீட்டுச் சாதனங்கள் 2. வருவிளைவுச் சாதனங்கள்
   3. தேக்க சாதனங்கள் 4. தொடர்பாடற் சாதனங்கள்

4. கணினியின் மூளையாகக் கருதப்படுவது
   1. நினைவக அலகு 2. மையமுறைவழி அலகு
   3. எண்கணிதத்தர்க்க அலகு 4. கட்டுப்பாட்டு அலகு

5. முறைவழியாக்கியின் அகணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது அதன் செயற்றிறன்
   1. குறையும் 2. மாறாது
   3. அதிகரிக்கும் 4. கூடிக்குறையும்

6. தெரிவிப்பியின் வகைக்குள் அடங்குவது
   1. கதோட்டுக்கதிர்க்குழாய் 2. திரவப்பளிங்குக் காட்சியகம்
   3. ஒளிகாலும் இருவாயி 4. மேற்கூறிய யாவும்

7. கணினி ஒன்றை கொள்வனவு செய்யும் போது கருத்தில் கொள்ளவேண்டிய தொழிநுட்பவியல் சார்ந்த விடயம் பின்வருவனவற்றுள் எது?
   1. உத்தரவாதம் 2. விலை
   3. முறைவழியாக்கியின் கதி 4. விற்பனைக்கு பிந்திய சேவை

8. கணக்காளர்கள் தற்போது பயன்படுத்தப்படும் இலத்திரனியல் ஆவணம் பின்வருவனவற்றுள் எது?
   1. தரவுத்தளம் 2. சொல்முறைவழிப்படுத்தல்
   3. மின்னஞ்சல் 4. விரிதாள்

9. பின்வருவனவற்றுள் பிரயோக மென்பொருளாக அமையாதது
   1. விரிதாள் 2. தரவுத்தளம்
   3. வலைமேலோடி 4. விண்டோஸ்







kalvi.lk

10. விரிதாளில் நிரலும் நிரையும் இடைவெட்டும் இடம்
1. கலம் 2. நிரல்
3. நிரை 4. கலவீச்சு

11. ஆவணம் ஒன்றை அச்சிட முன்னர் சரி பார்ப்பதற்கான கருவி
1. Print 2. Print Preview
3. Cut 4. Redo

12. விரிதாளில் கலவீச்சில் உள்ள பெறுமானங்களின் கூட்டுத்தொகையை காண்பதற்கான சார்பு பின்வருவனவற்றுள் எது?
1. Min 2. Sum
3. Average 4. Max


13. அட்டவணைப்படுத்திய தரவுகளை உருக்களில் மூலம் காட்டுவதற்குப் பயன்படுவது
1. நிரை 2. நிரல்
3. கலம் 4. வரைபுகள்

14. பின்வருவனவற்றுள் சலாகை வரைபாக அமைவது எது?
1. 
2. 
3. 
4. 

15. விரிதாளில் கலவீச்சில் உள்ள பெறுமானங்களின் இழிவுப்பெறுமானத்தை காண்பதற்கான சார்பு பின்வருவனவற்றுள் எது?
1. Minimum 2. Min
3. Maximum 4. Average

16. நவீன கணினிகளில் காணொளி வரைவியல் பொருத்தித் துறைக்குப் (VGA port) பதிலாக பயன்படுத்தும் துறை பின்வருவனவற்றுள் எது?
1. HDMI 2. USB
3. PS/2 4. Serial

17. பின்வருவனவற்றுள் அழிதகு நினைவகமாத் தொழிற்படுவது
1. Scanner 2. Hard Disk
3. RAM 4. ROM

18. பாய்ச்சற் கோட்டுப்படத்தில் தரவு ஒன்றினை உள்ளீடு செய்வதற்கான நியமக் குறியீடு பின்வருவனவற்றுள் எது?
1. 
2. 
3. 
4. 

19. செயல் ஒன்று திரும்பத்திரும்ப நடைபெறும் செயற்பாட்டைக் குறிப்பது
1. தெரிவு 2. வரிசை முறை
3. மீள்வருகை 4. பல்தெரிவு

20. பின்வருவனவற்றுள் செய்நிரலாக அமைவது
1. விரிதாள் (Spread Sheet) 2. தரவுத்தளம் (Database)
3. நிகழ்த்துகை (PowerPoint) 4. ஸ்கிரச் (scratch)



kalvi.lk

## பகுதி 2


I. 1. வருவிளைவுச் சாதனம் என்றால் என்ன? உதாரணம் 3 தருக?
2. கணினி மூலம் செய்யத்தக்க பயனர் தேவைகள் 2 தருக.
3. நிச்சமான இடத்தில் வைத்துப் பயன்படுத்தப்படும் கணினிகள் 4 இன் பெயரைக் குறிப்பிடுக.
4. தரப்பட்ட முறைவழியாக்கியின் வகையில் இருக்கும் அகணிகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

| வகை | அகணியின் அளவு |
|---|---|
| Single Core | |
| Dual Core | |
| Quad Core | |

5. முறைவழியாக்கியை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் 2 இன் பெயரைக் குறிப்பிடுக.


(15 புள்ளிகள்)

II. 1. உற்பத்தித் தொழிநுட்பவியலுக்கு ஏற்ப தெரிவிப்பியின் வகைகளை குறிப்பிடுக.
2. தரப்பட்ட படமானது வன்பொருள், பிரயோக மென்பொருள், பணிசெயல்முறைமை, பயனர் தொடர்புடைமையைக் காட்டுகின்றது.




X, Y, Z என்பவற்றுக்குப் பொருத்தமான பதத்தைக் குறிப்பிடுக.
3. பயனருக்கும் வன்பொருளுக்கும் இடையே தொடர்புடைமையை ஏற்படுத்துவது எது?
4. உரிமம் பெற்ற பணிசெயல்முறைமைக்கு உதாரணம் ஒன்று தருக.
5. கணினி ஒன்றை கொள்வனவு செய்யும் போது கருத்தில் கொள்ள வேண்டிய தொழிநுட்பம் சார் விடயங்கள் 3 தருக.

III. விரிதாள் ஒன்றின் இடைமுகம் தரப்பட்டுள்ளது. இதனைப்பயன்படுத்தி விடையளிக்குக.






kalvi.lk

a. R1, R2, R3, R4, R5 என்பன குறிப்பனவற்றை எழுதுக.

b. விரிதாளில் கலவீச்சில் உள்ள பெறுமானங்களின் சராசரியைக் காண்பதற்கான சார்பு எது?

c. தரவுகளைப் பகுப்பாய்வு செய்து அவற்றை உருக்களின் மூலம் காட்டுவதற்கு எதனைப் பயன்படுத்தலாம்

IV. 1. ஒரு நிபந்தனைக்கு ஏற்ப இரு சந்தர்ப்பற்களுக்கு இடையே ஒரு சந்தர்ப்பத்தை தெரிந்தெடுத்தலை எவ்வாறு அழைப்பர்?

2. பின்வருவனவற்றுக்கு பாய்ச்சல் கோட்டுப்படத்தில் வரையும் நியமக் குறியீடுகளை வரைக

1. ஆரம்பம் (Start)
2. செயற்பாடு (Processing)
3. உள்ளீடு (Input)
4. வெளியீடு (Output)
5. தீர்மானம் எடுத்தல் (Decision Making)

3. ஒரு நாணயத்தைச் சுண்டும் போது தலை அல்லது பூ பெறுவதற்கான சந்தர்ப்பங்களைக் காட்டுவதற்குப் பாய்ச்சல் கோட்டு வரைபடம் வரைக.

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION I PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457